திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவரவர்களே, நம்முடைய நாடு விவசாயத்தில் மிகவும் கஷ்டமடைந்துகொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தினால் என்னுடைய தொகுதியாகிய சங்கராபுரம் தொகுதியிலும் தண்டராம்பட்டுத் தொகுதியிலும் சுமார் 50,000 ஏக்கர் பாசன வசதி பெறும். ஆகவே இந்தத் திட்டத்தை விரைவிலே செயல்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, ஏற்கெனவே திட்டமிட்டபோது 750 மில்லியன் கன அடி தண்ணீர் உபரியாகக் கிடைக்கும் என்றும், 5789 ஏக்கர் புன்செய் நிலம் பாசன வசதி பெறும் என்றும், 1920 ஏக்கர் நன்செய் நிலம் பாசன உறுதி பெறும் என்றும், 411.3 ஏக்கர் நன்செய் நிலத்திற்கு பாசன பற்றாக்குறை நீங்கும் என்றும் வரிவிதித்திருக்கிறார்கள். 470 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டத்திற்கு மதிப்பீடு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது வடாற்காடு மாவட்டத்திலே, அதிலும் குறிப்பாக ஆண்டுதோறும் வறட்சியால் பாதிக்கப்படும் கராம்பட்டு, தண்டராம்பட்டு பகுதிகளுக்கு நிச்சயமாகப் பயன்படும். ஆகையால்தான் இத்திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மேல் அணையிலிருந்து வலதுபுற கால்வாய்த் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே இடதுபுறக் கால்வாய்த் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் இருந்தது. இந்தத் திட்டத்தினால் அது பாதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, ஒரு திட்டத்தை ஆராயும்போது ஏற்கெனவே இருக்கிற எந்த ஒரு திட்டமும் பாதிக்காது. பொன்னை ஆற்றின் மேல்பகுதியில், தர்மபுரி மாவட்டத்தில் 5 புதிய நீர்த்தேக்கங்களைக்கட்டுகிறோம். அதனால் உபரி நீர் வரத்து குறைந்தால் இந்தக் கால்வாய்த் திட்டம் பயனற்றுப்போகும். அப்படி ஏற்படக்கூடாது என்று முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கிறோம். ஆகவே, இருக்கிற திட்டம் எதுவும் பாதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குள்ளாசெட்டி அணை மராமத்துப்பணி.

*வினா எண் 274—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கருக்கும் எமகல் நத்தத்திற்கும் இடையில் உள்ள குள்ளாசெட்டி அணை பழுது அடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

1982 பிப்ரவரி 19]

(ஆ) ஆம் எனில் பழுதுபார்க்கும் பணி எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) குள்ளாசெட்டி அணையை மராமத்து செய்வதற்கான வேலை வறட்சி நிவாரணத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிவடையும் நிலையில் உள்ளது.

அமராவதி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்,

* வினா எண் 275—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி ஆற்றில் மயில்ரங்கம் அருகே அணைகட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) & (ஆ) இத் திட்டம் முதல்நிலை ஆய்வில் உள்ளது என தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

குதிரை ஆறு அணைக்கட்டும் திட்டம்.

* வினா எண் 276—திரு. ப. நெடுமாறன், திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தாலுகா குதிரை ஆறு அணைக்கட்டும் திட்டம் பற்றிய பரிசீலனை எந்தக் கட்டத்தில் உள்ளது?

(ஆ) அது எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகின்றது.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் முழுப்பயனும் மிகவும் பின்தங்கிய வறண்ட பகுதியான பழனிதாலுக்கா, வேடசந்தூர் ஆகிய இரண்டு தாலுக்காக்களுக்கும் கிடைக்கின்ற வகையிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS